மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.02/2025
இன்
அசல் வழக்கு எண்.26/2024
-------

1. மகேஸ்வரி
2. அஸ்வின் .. மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

ராமசாமி .. எதிர்மனுதாரர்/ வாதி

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 03.06.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. பி. பொன்ராஜ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, மனு, அபிடவிட்டு மற்றும் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது தாவா அசல் வழக்கில் மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 20.06.2025 ம் தேதி பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி கட்டளை 9 விதி 7 பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**–

**2.1.** மனுவில் 1ம் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. 2ம் மனுதாரருக்காகவும் சேர்த்து இந்த அவிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/வாதி பிரதிவாதிகள் மீது உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை கொண்டு தாவா அசல் மனுவினை தாக்கல் செய்துள்ளார். தாவா அசல் மனுவில் கடந்த 20.06.2025 ம் தேதி மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல்

செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. மனுதாரர் கடந்த 19.06.2025 ம் தேதி அவரது வீட்டில் வழுக்கி விழுந்ததன் காரணமாக மனுதாரர்களது காலில் தசைபிடிப்பு ஏற்பட்டு வீட்டில் கட்டாய ஓய்வில் இருந்து வந்தேன்.

2.2. அதன் காரணமாக 20.06.2025 ம் தேதி மனுதாரரால் நேரில் ஆஜராக இயலவில்லை. மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்ய இயலாமல் போனதால் 20.06.2025 ம் தேதி தாவா வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்துள்ளது. மேற்படி தவறுகள் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும். தாவா அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல கட்சி உள்ளது எனவே கடந்த 20.06.2025 ம் தேதி பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். தாவா அசல் வழக்கினையும் முழுமையாக தீர்மானிக்க முடியாத சூழ்நிலையும் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3. <u>**எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்–**</u>

**3.1.** இதில் வியக்கதக்கதாய் ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் யாவும் கடுமையாக மறுக்கப்படுகிறது. இந்நிர் மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதல்ல. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா வழக்கில் கடந்த 11.07.2024, 14.08.2024, 18.09.2024, 16.10.2024, 29.11.2024, 22.01.2025, 17.02.2025, 12.03.2025, 19.04.2025, 06.06.2025, 12.06.2025, 20.06.2025 என ஒரு ஆண்டுக்கும் மேலாக எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்தா பெற்றிருக்கிறார்கள். ஆனால் கடந்த 20.06.2025 ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவான காலகட்டத்தில் சமூகம் நீதிமன்றத்தில் அ.வ.எண்.02/2024 என்ற மற்றொரு வழக்கை வாதிகளாக இருந்து நடத்தி வருகின்றார்கள். மேற்படி வழக்கில்

வாதிகளாக இருந்து நடத்தி வந்துகொண்டு இந்நிர் தாவா வழக்கில் பிரதிவாதிகளாக இருந்து ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது வேண்டுமென்றே ஏற்படுத்தியது போல இருந்து வருகிறது. எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அபிடவிட்டில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. எனவே அவை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்பட வில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** **<u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் பிரதிவாதிகள். மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், மனுதாரர் 19.06.2025 ம் தேதி வீட்டில் வழுக்கி விழுந்ததன் காரணமாக காலில் தசைபிடிப்பு ஏற்பட்டு வீட்டில் கட்டாய ஓய்வில் இருந்து வந்ததால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக இயலவில்லை என்றும், எனவே மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி தவறுகள் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டது. மேலும் தாவா அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், எனவே மேற்படி தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டியதாக உள்ளது என்றும், அவ்வாறு இல்லாவிட்டால் மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா வழக்கில் கடந்த 11.07.2024, 14.08.2024, 18.09.2024, 16.10.2024, 29.11.2024,

22.01.2025, 17.02.2025, 12.03.2025, 19.04.2025, 06.06.2025, 12.06.2025, 20.06.2025 என ஒரு ஆண்டுக்கும் மேலாக எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்தா பெற்றிருக்கிறார்கள் என்றும், ஆனால் கடந்த 20.06.2025ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், எனவே மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் அபிடவிட்டில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், அவை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டடப்பட்டுள்ளது.

**6.3.** வழக்கு ஆவணங்கள், இருதரப்பு வாதங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் வீட்டில் வழுக்கி விழுந்து காலில் தசைபிடிப்பு ஏற்பட்டதால் பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிடப்பட்டுள்ளது.

6.4. வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மனுதாரர்களுக்கு தங்களது தரப்பை எடுத்துரைக்கவும், வழக்கு விசாரணையின் மூலம் முறையான தீர்ப்பை வழங்குவதற்காகவும் மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பளிப்பதே நீதியின்பால் உகந்தது என்றும், மேலும் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கால விரயத்திற்கு மனுதாரர்கள் செலவுத் தொகை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ 06.07.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 06.07.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்துூர்.
இ.ம.எண்.02/2025
இன்
அ.வ.எண்.26/2024
உத்தரவு
நாள்–12.06.2026.